# ‘கெங்கம்மாவின் புதுமைப் பெண்’ என்ற சிறுகதையில் சித்தரிக்கும் தற்கால பாரதி கண்ட புதுமைப் பெண்: ஓர் பார்வை

# Bharathiyar’s portrayal of a novel woman in contemporary society in the short story of ‘*Gengammavin Pudhumai Penn*’: A Review

முனைவர் ரவிந்திரன் மாரையா / Dr. Ravindaran Maraya[1]
முனைவர் மோகனதாஸ் ராமசாமி / Dr. Mohana Dass Ramasamy[2]
அஸ்வினி கண்ணப்பன் / Ashwini Kannappan[3]

## Abstract

The article focuses on Bharathiyar’s portrayal of a novel woman in one of the short stories of 34th *Peravai Kathaigal*. The main purpose of this review is to identify how *Magakavi* Bharathiyar’s novel woman is portrayed in the contemporary society through the short story entitled ‘*Gengammavin Pudhumai Penn*’. Tamilazhagi is the protagonist of this short story who represents Bharathiyar’s novel woman. She has vast knowledge about gender equality, the importance of education for women in this contemporary world, bravery of women to fight for their rights, women rights in marriage, and women independence. Tamilazhagi of ‘*Gengammavin Pudhumai Penn*’ stands for the independence and rights of women envisioned by Bharathiyar’s in his novel woman.

Date of submission: 2021-11-10
Date of acceptance: 2021-11-28
Date of Publication: 2021-07-20
Corresponding author’s Name:
Dr. Mohana Dass Ramasamy
Email: rmohana_dass@um.edu.my

**Key Words:** Bharathi, Novelty Woman, Independence, Contemporary, Society, Short Story.

## முன்னுரை

தமிழ் இலக்கியம் தொன்மைச் சிறப்புடையது, ஏறக்குறைய முப்பது நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து அமைந்து வருகிறது. அவ்வரிசையில் மலேசியத் தமிழ்ப் படைப்புலகம் 1800 களில் தொடங்கி கவிதை, சிறுகதை, நாவல், கவிதை, புதுக்கவிதை, ஹைக்கு எனத் தனது இலக்கிய பயணத்தைத் தொடர்கிறது (கிருஷ்ணன், 2020). எனவே, மலேசியத் தமிழ் இலக்கியம் 130 ஆண்டுகளுக்கு மேலான நீண்ட நெடிய வரலாற்று பின்னனியைக் கொண்டுள்ளது. மலேசிய மன்னில் தோட்டப்புற மக்கள்

[1] The author is a Senior Lecturer at Department of Indian Studies, Faculty of Arts and Social Science. ravindaranm@um.edu.my

[2] The author is a Senior Lecturer at Department of Indian Studies, Faculty of Arts and Social Science. rmohana_dass@um.edu.my * Corresponding author

[3] The author is an undergraduate at Department of Indian Studies, Faculty of Arts and Social Science. ashwinikannappan.ak@gmail.com

தங்களின் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, சமயம், பழக்க வழக்கங்கள் ஆகிய கூறுகளை நிலை நிறுத்துவதற்க்குக் கையாண்ட பல வழிமுறைகளில் ஒரு வழிமுறைதான் இலக்கியப் படைப்புக்கான தோற்றம் என்பர் (சபாபதி, 2015). மலேசியத் தமிழ் இலக்கியங்கள் இன்றளவும் மலேசியத் தமிழ் மக்களின் மத்தியில் புதிய சிந்தனையை விதைத்துக் கொண்டு இருக்கிறது.

## ஆய்வின் நோக்கம்

பேரவைக் கதைகளில் பொதுப் பிரிவில் வெற்றிப் பெற்ற கெங்கம்மாவின் புதுமைப் பெண் என்ற சிறுகதையில் பாரதி கண்ட புதுமைப் பெண்ணை எவ்வகையில் தற்கால சமுதாயத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளனர் என்பதைக் கண்டறிவது இவ்வாய்வு கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

## ஆய்வு முன்னோடி

இந்த ஆய்வுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த பல நூல்களுள் மிக முக்கியமாக விளங்குவது ‘அம்மா’ கதையில் கணவனால் கொடுமைப்படுத்தப்பட்ட மனைவி என்ற தலைப்பில் இராஜேஸ்வரி ஆறுமுகம் 2015 ஆம் ஆண்டு எழுதிய ஆய்வுக்கட்டுரையாகும். இவ்வாய்வு கட்டுரையில் 20 வது பேரவைக் கதைகளில் இடம்பெற்ற ‘அம்மா’ என்ற சிறுகதையில் கணவனால் துன்புறுத்தப்படும் ஒரு மனைவியின் அவல நிலையையும் அதிலிருந்து விடுதலைப்பெற பெண்கள் எதிர்க்கொள்ளும் போராட்டங்களையும் சிக்கல்களையும் ஆய்வாளர் முன்வைக்கிறார். இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கமாக திகழ்வது பெண்ணியக் கோட்பாட்டுடன் பெண்ணின் நிலை மற்றும் பெண்ணின் விடுதலையை அடையாளம் காண இயல்கிறது. பெண்களைக் கலாச்சார பெண்ணியம் உட்படுத்தினாலும் பெண்கள் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வீரநடை போடுகின்றனர் என்பதை இவ்வாய்வின் பயனாகக் காண இயல்கிறது.

அதனைத் தொடர்ந்து, ‘இமையம் படைப்புகளில் பெண்களின் நிலை ஒரு ஆய்வு’ என்ற தலைப்பில் முனைவர் ஆர் விஜயசாமுண்டீஸ்வரியும் சராளா தேவியும் இணைந்து 2018 ஆம் ஆண்டில் எழுதிய ஆய்வுக்கட்டுரை. இந்த ஆய்வு கட்டுரையில் இமையம் படைப்புகளில் பெண் கதாப்பாத்திரங்கள் முழுக்க முழுக்க சுதந்திரமான கதாப்பாத்திரங்களாகச் சித்தரிக்கப்பட்டாலும், இச்சமூகத்தில் பல வழிகளில் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதை அறிய இயல்கிறது. மேலும், பெண்களுக்கென்று இலக்கணத்தை வகுத்த சமுதாயமே, பெரும்பாலும் பெண்களின் வாழ்க்கையைத் தீர்மாணிக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

தொடர்ந்து, முனைவர் சரவணன் 2019 ஆம் ஆண்டில் ‘சரசுவின் சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனை’ என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக்கட்டுரையை எழுதியிருக்கிறார். சரசுவின் சிறுகதையில் பெண்கள் கதாப்பாத்திரங்களும், பெண்களின் மனநிலையும் ஆராயப்பட்டன. சரசு என்கிற பெண் எழுத்தாளரின் வாயிலாக இலக்கியப் படைப்புகளில் தோன்றும் பெண் கதாப்பாத்திரங்கள் சித்தரிக்கும் ஆணாதிக்க கருத்துகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதைக் காண இயல்கிறது.

## ஆய்வுநெறி

இவ்வாய்வுக் கட்டுரை தரப்பகுப்பாய்வு (qualitative) நெறியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது (Cresswell, 1993). இதில் ஆய்வாளர் ‘நூல் பகுப்பாய்வு’ முறையை ஆராய்ச்சிக்கான முதன்மை வழிமுறையாகத் தேர்ந்தெடுத்துள்ளார். ஏனெனில், தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதையை ஆழமான ஆய்வுக்கு உட்படுத்த உள்ளடக்க ஆய்வையும் இம்முறை கொண்டுள்ளது (Peter Goodrich, 1986). உள்ளடக்க ஆய்வு முறையின் வழி இந்தச் சிறுகதைகளில் சித்தரிக்கப்படும் பாரதி கண்ட புதுமைப் பெண்ணைக் கண்டறிய இயல்கிறது. ஆகவே, ஆய்வு நோக்கங்களை அடைவதற்குப் பேரவைக் கதைகளைக் களமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சிறுகதையான கெங்கம்மாவின் புதுமைப் பெண் என்ற சிறுகதையை ஆய்வாளரே தேர்ந்தெடுத்துக்

கொண்டார்.

### மலேசியாவில் சிறுகதையின் வளர்ச்சி

சிறுகதை மனிதனின் உற்ற தோழன் எனலாம். மலேசியர்களின் வாழ்வியலைப் படம்பிடித்து காட்டும் வரலாற்று களஞ் சியமாகவே மலேசிய சிறுகதைகள் விளங்குகிறது. மலேசியாவில் சிறுகதையின் வரலாறு 1930ஆம் ஆண்டு முதல் சிறுகதையான 'நவரச கதா மஞ்சரி' சிறுகதையிலிருந்து தொடங்குகிறது. (சபாபதி, 2014). 1940 யில் மலாயா ஜப்பனியர் ஆட்சி காலத்திலும் ஏராதாள 50 சிறுகதைகள் இந்திய சுதந்திரம் போன்ற சமகால பிரச்சனையை முன்னிறுத்தி எழுதப்பட்டது. 1950 ஆம் ஆண்டு சிறுகதையின் வளர்ச்சிகாலம் எனலாம். (கிருஷ்ணன், 2020). 1950 களில், சுபநாராயணனும் பைரோஜி நாரயனும் இருவரும் இணைந்து தமிழ் நேசனின் ஞாயிறு பதிப்பில் 'கதை வகுப்பை' தொடங்கினர். 1952 ஆம் ஆண்டு கு. அழகிரிசாமி நிலாவட்டம் என்ற இலக்கிய கூடலை நிறுவிப் பலருக்குச் சிறுகதை எழுதுவதற்கான பயிற்சிகள் வழங்கினர். கோ. சாரங்கபானி மாணவர் மணிமன்றம் தோற்றுவித்து இளம் எழுத்தாளர்களை உருவாக்கினார். 1972 ஆம் ஆண்டு முருகு சுப்ரமணியம் தமிழ் நேசனில் 'பவுன் பரிசு' திட்டத்தைத் தொடங்கி வைத்தார். மலாயா பல்கலைகழக பேரவைக் கதைகள் சிறுகதை வளர்ச்சிக்கு வித்திட்டது எனச் சிறுகதையின் வளர்ச்சியை அடுக்கிக் கொண்டே போகலாம்.

### பேரவைக் கதைகளின் சிறுகதைப் போட்டிகள்

1982 ஆம் தொடங்கி மலேசிய சிறுகதை வளர்ச்சிக்கு மலாயா பல்கலைக்கழக தமிழ் பேரவைப் பெறும் பங்காற்றி வருகின்றது. 34 ஆண்டுகளுகாக ஆண்டுத்தோறும் சிறுகதை வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் பேரவைக் கதைகள் என்ற சிறுகதைப் போட்டியை நடத்தி வருகின்றது (Singgaravelu, 2019). இப்போட்டியில் பொதுப் பிரிவு, மாணவர் பிரிவு, அனைத்துலகப் பிரிவு என்ற பிரிவுகளில் அனைத்து தரப்பினருக்கும் எழுத்தார்வத்தை ஏற்படுத்தும் வகையில் போட்டிகள் நடைப்பெறுகின்றன. அவ்வரிசையில் கடந்த 34 வது பேரவைக் கதைகளில் பொது பிரிவில் வெற்றிப் பெற்ற சிறுகதைகளில் ஒன்று கெங்கம்மாவின் புதுமைப் பெண். இச்சிறுகதைப் பாரதியின் புதுமைப் பெண்ணை இக்கால சமுதாயத்திற்கு அறிமுகம் செய்வது போன்று எழுத்தாளர் நித்தியா குணசேகரன் எழுதியுள்ளார்.

### கெங்கம்மாவின் புதுமைப்பெண்ணின் கதைச் சுருக்கம்

பெண்ணியத்தை நன்கு உணர்ந்த ஒரு இளம்பெண் தமிழழகி அதற்கு உரம் ஊட்டியது பல்கலைக்கழக கல்வி. திருமணத்தில் ஈடுபாடு இல்லையென்றும், வெளி தேசத்தில் வேலைக் கிடைத்து விட்டது அங்குச் செல்ல வேண்டும் என்று சொல்லும்போது பெற்றோர்கள் இருவரும் ஏற்க மறுத்தனர். இந்தக் காரசார விவாத்தில் தமிழழகி தன் தாய் இத்துணை வருடமாக எப்படிப்பட்ட சுதந்திரமற்ற ஒரு வாழ்க்கையை ஆணாதிக்கத்திற்கு உட்ப்பட்டு வாழந்திருக்கிறார் என்பதை ஒவ்வொன்றாகக் கோடிட்டுக் காட்டினாள். அவ்வேளையில்தான் தாய் கெங்கம்மாவுக்குத் தான் வாழ்ந்த வாழ்க்கைப் பெருமைக்குரியது அல்ல வெறுமைக்குரியது என்ற உண்மையை உணர்ந்தார். தந்தையான சின்னச்சாமியும் தன் சுயநலத்திற்காகக் கெங்கம்மாவைப் பல முறையில் காயப்படுத்தியுள்ளதை உணர தொடங்கினார். மேலும், அவள் பேசிய அனைத்தையும் கேட்டுக்கொணடிருந்த தமிழழகியின் மாப்பிள்ளைப் பாரதி கண்ட புதுமைப் பெண் என்று தமிழழகிக்குப் புகழாரம் சூட்டினார். இறுதியாக, தனது இரக்கையை விரித்துப் பறப்பதற்குத் தயாரனாள் தமிழழகி.

### பாரதியும் தான் கனவு கண்ட புதுமைப் பெண்ணும்

புதுமைப் பெண்களைப் பற்றித் தமது கவிதையில் முதலில் எழுதிய பெருமைக்குரியவர் மகாகவி பாரதியார் என்றால் மிகையாகா. பாரதியார் தன் எதிர்பார்ப்பு, ஏக்கம், கனவு, கற்பனை, வேட்கை ஆகிய அனைத்தையும் கற்பனையாகக் கொண்டு 'புதுமைப் பெண்' என்ற கற்பனை ஓவியத்தைத் தீட்டினார்.

பாரதியார் புதுமைப் பெண்களை ‘மாதரசு’, ‘பெண்மைத் தெய்வம்‘, ‘செம்மை மாதர்’, ‘வீரப் பெண்’, ‘இளைய நங்கை’ என்று பல பெயர்களிட்டு பெண் சுதந்திரத்திற்கு உயிரோட்டம் வழங்க முட்ப்பட்டார்.

*‘நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்*

*நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்*

*திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்*

*செம்மை மாதர் திறம்புவது இல்லையாம்’*

(Kalanjiam, 2020)

என்ற பாரதியாரின் கவிதைகளின் வரிகள் ஒவ்வொரு பெண்களின் எழுச்சியாகவே பார்க்கப்படுகிறது. பாரதியார் காண விரும்பிய புதுமைப் பெண் என்பவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற திரைகளைக் கடந்து எந்த ஒரு நிலையிலும் தன் இலட்சியத்திலிருந்தும் தனது உயர்ந்த சிந்தனைகளிலிருந்தும் சற்றும் பிரலாது இருப்பதே இலக்கணம் என்றார். கெங்கம்மாவின் புதுமைப் பெண் என்ற சிறுகதையில் தமிழழகி என்ற கதாப்பாத்திரத்தின் வாயிலாகப் புரட்சிக்கவி பாரதி கண்ட புதுமைப் பெண்ணின் இலக்கணத்தைக் காண இயல்கிறது. அவை தற்கால பெண்களுக்கு ஒரு முன்னோடியாகக் காட்சியளிக்கிறது.

### கெங்கம்மாவின் புதுமைப் பெண் என்ற சிறுகதையில் பெண் கல்வியை மையப்படுத்தும் பாரதி கண்ட புதுமைப் பெண்

கெங்கம்மாவின் புதுமைப் பெண் என்ற சிறுகதையின் கதாநாயகியான தமிழழகி கல்வியைப் போற்றுபவளாகக் காட்சியளிக்கிறாள். பெண்களும் கல்வியில் சிறந்து விளங்குவதற்கு ஆண்களைப் போன்று சம உரிமைகள் உண்டு என்ற பாரதியாரின் கூற்றுக்குச் சிறந்த உதாரணமாக விளங்குகிறாள்.

*‘பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்*

*பேதமை அகற்றிவிடும் காணீர்’*

(Kalanjiam, 2020)

இவ்வரிகளின் வாயிலாகப் பெண் கல்வியின் முக்கியதுவத்தை வழியுறுத்துகிறார் பாரதி. பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகக் காட்சியளிக்கும் தமிழழகி சிறுவயதில் தன் தாயின் செயல்களைக் கண்காணித்து ஒரு பெண் என்பவள் ஆணுக்கு அடங்கிப் போக வேண்டும் என்ற சிந்தனைக் கொண்டிருந்தாள். பல்கலைக்கழகத்தில் தமிழழகி பயின்ற பெண்ணியம் அவளைச் சிந்திக்க வைத்தது. தன் தாய் கெங்கம்மா கல்வியறிவு அற்று இருந்ததால் ஆணாதிக்கத்திற்கு உட்பட்டு வாழ்ந்த வாழ்க்கையைப் பெருமை என்று நினைத்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார் என்பதை தமிழழகியாள் உணர இயன்றது. இந்த அறியாமையின் காரணமாகதான் தமிழழகி திருமணத்தில் உடன்பாடில்லை என்று கூறியபோது கெங்கம்மா *“படிக்க வைச்ச திமிருலா பேசுற, போதும் உன் படிப்பு, சமைக்கக்கத்துக்கென்னு விரட்டிவிட்டிருந்த அடங்கிப் போயிருப்பா”*, என்றப்போது அதற்குப் பதிலடியாகத் தமிழழகி, *“படிப்பு ஒன்றுதான் எல்லா உரிமையும் சுதந்திரத்தையும் ஒரு பொண்ணுக்கு தரும் என்றதுடன் ஒரு பொண்ண படிக்க வைச்சா ஒரு வம்சமே படிச்சவங்களா இருக்கும்”. (நித்தியா, 2020)* என்று கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தது மட்டுமல்லாமல். *“எனக்கும் படிக்கத் தெரிஞ்சிருந்த நல்லாருக்கும்னு, சத்தமே கேக்காம நீ முணுமுணுத்திருக்கிறப்பவும் நா படிச்சிருந்தா எப்படியிருந்திருப்பேன் தெரியுமா? என ஏங்கியிருக்கிங்கன்னு எனக்குத் தெரியும்!” (நித்தியா, 2020)* என்றும் தாய் கெங்கம்மா படிப்பறிவு இல்லாமல் தனக்குள்ளே வறுத்தப்படுவதையும் சுட்டிக் காட்டினாள். தமிழழகி பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகக் கல்வியில் தேர்ந்து அறிவாற்றலுடன் பெண்ணியக் கருத்துகளையும் ஆணாதிக்கத்தின் கோரத்தை வெளிப்படுத்தித் தன் பெற்றோர்களைச் சிந்திக்க வைத்தாள். பிறருக்கு அடிமையாக வாழும் நிலையற்று சுயக்காலில் நிற்க வழிவகைச் செய்து வேறு தேசத்தில் தனியாக சென்று வாழக்கூடிய நம்பிக்கையைப் பெற்றாள். தமிழழகி பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக அஞ்சா நெஞ்சத்துடன் இந்தச்

சமுதாயத்தில் முழு சுதந்திரத்திற்கு ஏற்ப வாழும் பெண்ணாகக் கதையின் இறுதியில் வேறு தேசத்திற்குப் பயணிப்பதற்குத் தயாரிகிறாள்.

### ஆண் பெண் சமத்துவம் பேசும் பாரதி கண்ட புதுமைப் பெண்

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவி லோங்கி இவ்வையம் தழைக்குமாம்' (புதுமைப் பெண், செய்யுள், 4) என்ற பாரதியின் வரியின் கேற்ப பாரதி கண்ட புதுமைப் பெண் தமிழழகி ஆணும் பெண்ணும் சமம் என்றும் ஆண்களிடம் அடங்கிப் போக வேண்டிய எவ்வித தேவைகளும் பெண்களுக்கு இல்லை என்ற உரிமைக் குரலை இந்தச் சிறுகதையின் வாயிலாகக் காண இயல்கிறது.

*'ஒற்றைக் குடும்பந் தனிலேபொருள்*
*ஓங்க வளர்ப்பவன் தந்தை;*
*மற்றைக் கருமங்கள் செய்தேமனை*
*வாழ்ந்திடச் செய்பவள் அன்னை'*

(Kalanjiam, 2020)

இதில் பாரதி கூறும் கருத்து ஆண் பெண் இருவரும் இணைந்துதான் குடும்பம் இதில் ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி இல்லையென்ற கருத்தை வழியுறுத்துகிறார். "ஆம்பளையைச் சார்ந்து இருக்கிறதுதானே பெருமை", (நித்தியா, 2020) என்று கெங்கம்மா கூறும்போது அதைச் சற்றும் பொறுத்து கொள்ள இயலாத புதுமைப் பெண் தமிழழகி "பெண்ணை ஆண்கிட்ட சார்ந்த வாழப் படைக்கல, அவளும் ஆண் மாதிரியே வாழப் படைக்கப்பட்டவள்", (நித்தியா, 2020) என்றும் ஒரு பெண் ஆண்களைச் சார்ந்து வாழ்வதால்தான் அவளின் மதிப்பு பிறருக்குத் தெரியவில்லை என்கிறாள். இக்கருத்தின் வாயிலாகத் தமிழழகி ஆண் பெண் சமத்துவத்தை மிக அழகாக எடுத்துரைக்கிறாள். இதில் ஒன்றை மறந்துவிட இயலாது, கெங்கம்மா தன் கணவரைச் சார்ந்து வாழ்ந்ததால்தான் அவளின் ஆசைகள் அனைத்தும் கானல் நீரானது. தன் கணவன் சின்னச்சாமி தனக்கு ஒரு நீதி மனைவிக்கு ஒரு நியதி என்றார். குறிப்பாக, தன் மனைவி நோய்வாயுற்ற தோழியைக் காண செல்வது தவறு ஆனால் அவர் தன் நண்பர்களுடன் இரவில் அரட்டை அடிக்கலாம். எனவே, ஒரு பெண் என்பவளுக்கு ஆண்களைப் போல் அனைத்திலும் உரிமை உண்டு என்ற கருத்தை இச்சிறுகதையில் தமிழழகியின் கதாப்பாத்திரம் விதைக்கிறது.

### வற்புறுத்தி மணம் செய்தல் கூடாது என்ற சிந்தனைக் கொண்ட பாரதி கண்ட புதுமைப் பெண்

தமிழழகியின் ஒப்புதல் அற்று பெற்றோர்கள் திருமணம் ஏற்ப்பாட்டைச் செய்ய முட்படும்பொழுது பாரதியின் பெண்ணாகத் திகழும் தமிழழகி தனக்குத் திருமணத்தில் விருப்பமில்லை என்று தனது வாதத்தை எடுத்துரைக்கிறாள். "யாரோ தெரியாத ஒரு பையனை எப்படி திருமணம் பண்றது" (நித்தியா, 2020) என்ற வாசகத்திலிருந்து தமிழழகி தன்னுடைய திருமணத்தில் முடிவெடுக்கும் உரிமைத் தனக்கே வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டு இருக்கிறாள். "அம்மா, கல்யாணம் மட்டுமே ஒரு பொண்ணுக்கு முழுமை தராது மா; ஒரு பொண்ணுக்கு கல்யாணம் முக்கியம்னு சொல்றிங்க; ஆனா, பொண்ணுக்கு என்ன முக்கியத்துவம் இருக்குன்னு தெரியலம்மா", (நித்தியா, 2020) என்றதுடன் திருமணம் என்ற பந்தத்தில் ஒரு ஆண்தான் வாழ்கிறான் ஒரு பெண் வாழ்க்கையின் இறுதிவரைப் பல பொறுப்புகளைச் சுமந்தே செத்து மடிகிறாள் என்ற கருத்தையும் முன்வைக்கிறாள். எனவே, திருமணம் என்பது கட்டாயமல்ல அது ஒருவருடைய விருப்பம் என்ற கருத்தில் ஆளமாக நின்றவள் தமிழழகி. இதைதான் மகாகவி பாரதியாரும்,

*வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்*

*வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்.*

(Kalanjiam, 2020)

ஒரு பெண்ணை வற்புறுத்தி திருமணம் செய்தல் நீதிக்குப் புறம்பானது என்கிறார். ஒரு பெண்ணை வற்புறுத்தித் திருமணம் செய்து வைக்கும் வழக்கத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கும் பாரதியாரின் புதுமைப் பெண் தமிழழகி.

### பெண்கள் அடிமைப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்டிருக்க கூடாது என்று எண்ணும் பாரதியின் புதுமைப் பெண்

தமிழழகிக்குத் தன் தாய் அடிமைப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு பொறுத்துக் கொள்ள இயலவில்லை. தன்னுடைய கோபத்தின் உச்சமாகத் தன் தாயிடம் எடுத்துரைகிறாள். "அம்மா நீ பெரிய தியாகியா என்ன, உன் வாழ்க்கையை வாழ உனக்கு உரிமை இருக்குமா" (நித்தியா, 2020,). ஒரு பெண் என்பவள் தன் கணவனுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் வாழ்வது தவறல்ல ஆனால் தன்னுடைய உரிமை, கனவு, ஆசைகள் அனைத்தையும் துறந்துவிட்டு வாழ்வது வாழ்க்கையல்ல என்ற கருத்தை இச்சிறுகதையில் தமிழழகியின் வாயிலாகக் காண இயல்வதோடு சிந்திக்கவும் வைக்கின்றது. மேலும், தமிழழகி தன் அப்பா சின்னச்சாமி உடல் ரீதியாகத் தன் தாயைக் கொடுமைப்படுத்தாவிட்டாலும் மனரீதியாக அடிமையாக்கி துன்படச் செய்ததைக் கேள்விக்குட்படுத்திருக்கிறாள். இதை பாரதியார்;

*'அறிவு கொண்ட மனித வுயிர்களை*

*அடிமையாக்க முயல்பவர் பித்தராம்'*

(Kalanjiam, 2020)

பிறரை அடிமையாக்க வேண்டும் என்று எண்ணுவது மூடத்தனம் என்றார் . அதை நன்கு உணர்ந்த தமிழழகி தன் தாயின் விருப்பு வெறுப்புகளுக்குச் செவி சாய்க்காத தன் தந்தையிடம் "நீங்க அவங்க ஆசை கனவு என்னன்னு ஒருநாளாவது கேட்ருப்பீங்களா ? வேளா வேளைக்கு சாப்பாடு கொடுத்து, வீடு கொடுத்து, சட்டை துணிமணி வாங்கிக்கொடுக்கிறது ஒரு முதலாளி தன் அடிமைக்குச் செய்யிறதுக்கும் வித்தியாசம் இருக்கா?", (நித்தியா, 2020) என்று தன் தந்தையின் தவற்றைச் சுட்டிக்காட்டிய வீரப் பெண் தமிழழகி.

யாருக்கும் அஞ்சாத நம்பிக்கை நிறைந்த பாரதி கண்ட புதுமைப் பெண்

கெங்கம்மாவின் புதுமைப் பெண் என்ற சிறுகதையில் பாரதி காண விரும்பிய புதுமைப் பெண்ணைப் பல கூறுகளில் காண இயல்கிறது.

*நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,*

*நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்*

(Kalanjiam, 2020)

என்ற பாரதியாரின் வரியின்கேற்ப அஞ்சாத நெறியுடன் தன் வாழ்க்கையை வாழத் துடிப்பவள் தமிழழகி. தனக்குத் திருமணத்தில் விருப்பமில்லை என்பதை தன் பெற்றோர்களிடம் வெளிப்படையாக அச்சம் கொள்ளாமல் உரைத்தாள் என்பதை, "எனக்கு உலகம் பூரா சுற்றிப்பாக்கணும்ன்றது நீண்ட கால ஆசை. அதுக்கு இப்போ ஒரு நல்ல வாய்ப்பு வேலை ரூபத்தில் வந்துருக்கு. நா போகனும், கண்டிப்பா போகனும்! ஆனா, உங்க ஆசிர்வாதத்தோடு போகனும்", என்ற வரிகளின் வாயிலாக உணர முடிகின்றது (நித்தியா, 2020). அவ்விடத்தில் தமிழழகி அச்சம் கொண்டிருந்தால் அவளின் ஆசைகள் கனவுகள் கேள்விக்குறியாகி இருக்கும் என்பது தெளிவு. மேலும், தன் தாய் பல வருடங்களாகத் தன் தந்தையின் ஆணாதிகத்தால் பல இன்னல்களுக்கு ஆளானதைப் தன் தந்தையிடம் மிக வெளிப்படையாக அச்சம் கொள்ளாமல் எடுத்துரைத்தாள். மேலும், வெளி தேசத்துக்கும் எவ்வித அச்சமின்றி தனியாகச் செல்லும் ஆற்றலும் நம்பிக்கையும் கொண்டவளாக மிளிர்கிறாள் தமிழழகி.

### முடிவுரை

பேரவைக் கதையின் பொதுப் பிரிவில் வெற்றிப் பெற்ற கெங்கம்மாவின் புதுமைப் பெண் எனும் சிறுகதையில் கெங்கம்மா என்ற பெண் தனக்கே அறியாமல் ஆணாதிக்கத்தின் வலையில் சிக்கிக்கொண்டு தன் கணவனுக்கு அடங்கி வாழக்கூடிய வாழ்க்கைப் பெருமை நிறைந்தது என்று சிந்தனையுடன் இருக்கிறாள். ஆனால் கெங்கம்மாவின் மகள் தமிழழகி பெண்ணியத்தைப் படித்துப் புரிந்த பெண். தன் குடும்பத்தில் ஆணாதிகத்தினால் ஏற்படும் சிக்கலைப் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக நின்று வீரப்பெண்மணியாக வெற்றி கொள்கிறாள். பாரதி கண்ட புதுமைப் பெண் இலக்கணத்துக்குத் தக்க உதாரணமாகத் திகழ்கிறாள்.

# References

Arumugam, R. (2015). "'Amma' Kathaiyil kanavanal Kodumai Paduthap Padda Manaivi". *Journal of Tamil Peraivu. 7*(1), 91-97.

Cresswell, J.,W. (1993). *Research Design: Qualitative & Quantitative Approach*. London: Sage.

Kalanjiam. (2020). Puthumai Pen. Store.tamillexicon.com.

Maniam, K. (2020). Anmaikala Malaysia Tamil Sirukathaikalil Selnerikal, (Trends Of Recent Malaysian Tamil Short Stories). *Journal of Indian Studies.* 13, 6-19.

Maraya, R., & Raveendran, K. (2021). Contribution of Malaysian Youths in the Development of Modern Tamil Literature: A Review. *Journal of Tamil Peraivu.* 10(1), 114-120.

Nithya. (2020). Gengammavin Puthumai Pen. In *Pēravaik Kataikal* 34 (pp. 44- 51). KL: PBTUM.

Peter Goodrich. (1986). *Reading the Law: ACriticul Introduction to Legal Method and Technique.* U.K.: Blackwell Publishers.

Singaravelu.S (2019). *Malaya Palkalaikazhagam Tamil Peravai Varalaaru*, http://tls.my/our-story/

Veeramuthu, S. P., & Annamalai, M. D. M. (2019). Sarasuvin Sirikathaikalil Penniya Sinthanai (Feminism in the short stories of Sarasu). *Journal of Tamil Peraivu. 8*(2), 32-42.

Venugopal, S. (2015). Malaysia Tamil Sirukathaikalil Malysiya Tamilarin Adaiyalangal. *Journal of Tamil Peraivu. 1*(1), 42-52.

Vijayasamundeswary, R., & Saraladevi, M. (2018). Portrayal of women in creative writings of Imayam Padaippugal. *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)*, *7*(2), 132-137.